**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

## C.C.No.129/2023 P.W. 5 Additional Witness

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. தனிஸ்லாஸ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.11.2023.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u>** :

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் தற்பொழுது இரணியல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 19.01.2022 ம் தேதி காலை 10.00 மணிக்கு இரணியல் காவல்நிலைய பொதுநாட்குறிப்பு அலுவலில் இருக்கும்போது சுபாஷ் செல்வன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் அடிப்படையில் காவல்நிலையக்குற்ற எண். 37/2022 ச/பி. 457, 380 இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

கடந்த வருடம் ஒரு பவுன் நகை 30, 35 ஆயிரத்திற்குள் இருக்கும். நான் பதிவுச் செய்த முதல் தகவல் அறிக்கையில் 2 பவுன் நகை 20 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது நம்பும்படியாக இருக்கிறதா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

---

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.